# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1778/3 - 2012 ඔක්තෝබර් මස 01 වැනි සඳුදා - 2012.10.01

*1778/3 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது


## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தந்திரோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

3 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தந்திரோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீடு மற்றும் உல்லாசப் பயணத்துறை விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ரோஹன ராஜபக்ஷ ஆகிய நான் இந்த அறிவிப்பின் மூலம் -

(1) கிரிஷ் குழுமம் எனும் நிறுவனத்தினால் மேல் மாகாணத்தில் கொழும்பு 01 ட்ரான்ஸ் வேர்க்ஸ் நிலத்தில் மொத்தம் சுமார் நானூற்று நாற்பத்தொன்பது மில்லியன் அமெரிக்க டொலர்கள் (US$ 449,000,000) முதலீட்டில் மேற்கொள்ளப்படும் நாட்டுக்கு பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை ஈட்டித்தரவல்லதும் நாட்டின் புவியழகுத் தோற்றத்தினை மாற்றியமைக்கக்கூடியதாகவும் இருக்கும் தேசத்தின் நலனுக்கான கருத்திட்டமொன்றான கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தை தந்திரோபாய அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக இனங்காணப்படுகின்றது.

(2) இலங்கை முதலீட்டுச் சபையுடன் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடியான திகதி மேற்கூறப்பட்ட கருத்திட்டத்தின் ஆரம்பத் திகதியாக அமைவதுடன் இலங்கை முதலீட்டுச் சபையுடன் நிறைவேற்றப்பட்ட கருத்திட்ட ஒப்பந்தத் திகதியிலிருந்து அறுபது (60) மாதங்கள் எனும் ஒரு காலப்பகுதியினுள் கருத்திட்டத்தின் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் .

(3) மேற்கூறப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காக திருத்தப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தந்திரோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் நியதிகளின்படி இவ்வறிவித்தலின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாக விலக்களிப்புகள் கருத்திட்ட நிறுவனத்திற்கு ஏற்புடையதாகும்.

**அட்டவணை**

1. **2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

(i) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் கருத்திட்ட நிறுவனம் வரி விதிப்பனவுக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பித்த மூன்று வருடங்களின் பின்னால் ஆகிய இரண்டில் எது முன்னர் வருகின்றதோ அந்த ஆண்டு தொடக்கம் பத்து வருடங்கள் எனும் ஒரு காலப்பகுதிக்கு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.

மேற்சொல்லப்பட்ட வரிவிலக்களிப்பு காலப்பகுதியின் பின்னர் கருத்திட்ட நிறுவனத்தின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான வரிவிதிப்பு வரிவிலக்களிப்பு காலப்பகுதியினுள் இறுதித் திகதியை உடன் அடுத்துவரும் மேலும் ஒரு பதினைந்து (15) வருடக் காலப்பகுதியொன்றுக்கு ஒவ்வொரு வருட மதிப்பீட்டிலும் பிரயோகமாகும்

வரிவீதத்தின் அரைவாசியான (50 சதவீதமான) அல்லது ஆறு (6%) வீதத்துக்கு சமமான வீதத்தில் ஒரு பகுதிக்கு விலக்களிப்பு வழங்கப்படும். ஐயத்தை தவிர்ப்பதற்காக மேலே விளக்கப்பட்ட இருபத்தைந்து (25) ஆண்டுகளின் முடிவின் பின்னர் கருத்திட்டத்தை அமுலாக்கும் நிறுவனம் தொடர்பில் அப்போது அமுலில் இருக்கும் பொதுவான வரிச்சட்டம் ஏற்புடையதாகும்.

(ii) இலாபங்களிலிருந்து பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் பங்கு இலாபங்கள் சொல்லப்பட்ட பத்து (10) வருட கால வரி விலக்களிப்புக் காலப்பகுதியிலும் அதன் பின்னர் ஒரு (01) வருட காலப்பகுதிக்கும் வருமான வரியிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.

(iii) நிறுவனத்தின் ஆகக்கூடிய வெளிநாட்டு ஊழியர்கள் இருபது (20) பேர்களுக்கு உழைத்துச் செலுத்தும் வரியிலிருந்து (PAYE) ஐந்து வருடங்கள் (05) எனும் ஒரு காலப்பகுதிக்கு விலக்களிப்பு ஏற்புடையதாகும்.

(iv) பின்வரும் விடயங்கள் தொடர்பில் தடுத்து வைக்கும் வரி செலுத்துவதிலிருந்து கருத்திட்ட நிறுவனத்திற்கு விலக்களிப்பு வழங்கப்படும் :-

(அ) மூலதனச் செலவுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டு கடன் மீதான வட்டி ;

(ஆ) வரிவிலக்களிப்புக் காலப்பகுதியில் உசாத்துணையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தொழில்நுட்பக் கட்டணம்.

*1.* ***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டம் :***

கருத்திட்ட நிர்மாண காலகட்டத்தின் போது கருத்திட்டம் தொடர்பாக பொருட்களின் இறக்குமதி மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மற்றும் சேவைகள் மீது சேர்பெறுமதி வரி செலுத்துவதிலிருந்து கருத்திட்ட நிறுவனத்திற்கு விலக்களிப்பு வழங்கப்படும்.

*2.* ***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்.***

கருத்திட்ட நிர்மாண காலகட்டத்தின் போது துறைமுகம் மற்றும் விமான நிலைய விதிப்பனவிலிருந்து கருத்திட்ட நிறுவனத்திற்கு விலக்களிப்பு வழங்கப்படும்.

*3.* ***(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்.***

கருத்திட்ட நிர்மாண காலகட்டத்தின் போது கருத்திட்டம் அமுலாக்கும் நிறுவனத்தின் பெயரில் கருத்திட்டத்தின் நோக்கத்திற்காக மட்டும் இறக்குமதி செய்யப்படும் எல்லா மூலதனப் பொருட்கள் மீதும் சுங்கக் கட்டளை விலக்களிப்பு ஏற்புடையதாகும்.

*4.* ***2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம்.***

செயற்றிட்ட நடைமுறைப்படுத்தப்படும்/நிர்மாண காலப்பகுதியில் தொழிற்றுறை அத்தாட்சி நிதி அறவீடு மற்றும் செலுத்துகைகளிலிருந்து விலக்களிக்கப்படும்.

பசில் ரோஹன ராஜபக்ஷ, பா. உ.,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2012, செத்தெம்பர் 28.*

*10 - 657*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.